வெள்ளிக்கிழமை தோறும் வெளிவருவது

செய்தித் தாளாகப் பதிவுபெற்றது

உ
சிவமயம்

# இந்து சாதனம்
# HINDU ORGAN

சைவ பரிபாலன சபை வெளியீடு

பிரதி விலை சதம் 20

ஆரம்பம்: விரோதி வருடம் (1889) ஆவணி மீ 28-ம் உ

அச்சகம்: சைவப்பிரகாச அச்சியந்திரசாலை, 400, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம்  தொலைபேசி: 35

புத்- அக]  யாழ்ப்பாணம்: பிங்கள வருடம் சித்திரை மீ கஎ-உ வெள்ளிக்கிழமை (29 - 4 - 1977) [இல: ச

# உரிமை இயக்கப் பெரியவர் உயிர் நீத்தார்

## முப்பது ஆண்டுகள் முன்னணியில் நின்று முயன்ற தலைவர்

காலத்துக்குக் காலம் தமிழ் இனத்தின் உரிமைக் குரல் எழுப்பிய தலைவர்கள் வரிசையில் வந்த திருவாளர் சா. யே. வே. செல்வ



நாயகம் அவர்கள் சென்ற செவ்வாய்க்கிழமை முன்னிரவில் இவ்வுலக வாழ்வு நீத்தனர் என்ற துயரச் செய்தி கேட்டு ஈழத்து மக்கள் கவலைக் கடலில் அமிழ்ந்தி இருக்கின்றனர்.

தாயகத்திலும், மலேசியா சிங்காபுரியிலும் தமிழ் மக்கள் வாழும் ஏனைய இடங்களிலும் எங்கும் எல்லோரும் துக்க மயமாய் விட்டனர்.

பாராளுமன்றத்தில் இருபத்தைந்தாண்டுகள் அங்கத்தவராய்த் தமிழ் அரசுக் கட்சியின் தலைவராய்ப் பின் தமிழர் கூட்டணியின் தலைவராய்ப் பின் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களில் ஒருவராய் விளங்கிய பெரியார். அமைதியே உருவானவர்.

யாழ் கூட்டணிக் காரியாலயத்தில் மக்கள் அஞ்சலிக்கு வைக்கப்பட்ட பெரியாரின் சடலம் வீரசிங்க மண்டபத்தில் நேற்றும் இன்றும் பல்லாயிரக்கணக்கானவர்களின் அஞ்சலிக்குப் பின் தெல்லிப்பளையில் வாசஸ்தலத்தில் எடுத்துச் செல்லப்பட்டு ஊர்வலமாக யாழ் முற்றவெளியிலே பிரத்தியேகமாக உதவப்படும் நிலத்தில் நாளை தகனம் செய்யப்படும்.

## சமயக் கல்விக்கு முக்கியத்துவம

"நாட்டின் கல்வித் திட்டம் மாணவரை வளர்ச்சப் பாதையில் இட்டுச் செல்கின்றது, உலகில் எந்த நாட்டிலும் இல்லாத அளவுக்கு ஈழத்தில் சமயக் கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. சமய அடிப்படையில்லாத கல்வி பூரணத்துவம் வாய்ந்த கல்வியாக ஒருபோதும் அமையாது, சைவத் தமிழ் அடிப்படையில் பாரம்பரியமாகவே கல்வி[illegible]யை வளர்த்து வரும் சிறந்த கல்விக்கூடம் உரும்பராய் சைவத் தமிழ் வித்தியாலயம். இவ் வைர விழாவில் கலந்துகொண்டது எனக்கு மிகப் பெரிய மகிழ்ச்சியாகும் என்று அண்மையில் நிகழ்ந்த உரு சை. த. வித்தியாலய வைர விழாவில் உரையாற்றும்போது கல்வி அமைச்சின் தமிழ்ப் பிரிவின் வித்தியாதிபதி திரு கி. லக்ஷ்மண ஐயர் குறிப்பிட்டார்.

## வைதிகசைவம்

[கலாநிதி, பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை]

(முன் வளர்ச்சி — 5)

சந்நிதியை அணுகுவோர் சத்திநிபாதர்கள் அவர்கள் சுடச் சுடரும் பொற்பினர்கள். அவர்களுக்கேது சாதி?

சந்நிதியை அணுகாத வைதிகர்கள் பிறப்புப் புத்தி போகாதவர்கள்; போகாத வரையில் போதற்கேற்ற முறையிற் சாதியாசாரத்தின்வழி ஒழுகற்பாலர். சாதியால் வரும் பந்தம் போதற்கே சாதியாசாரம் மேற்கொள்ளப்படுவது,

இந்த இலங்கையில் ஒரு சாதியார், மற்றொரு சாதியாரை அடக்க முயல்கிறார்கள். இது சாதிப் புத்தி. அவ்வாறே அடக்கப்படுபவர்களும் ஆதிக்கம் வந்தால் மற்றவர்களை அடக்குவார்கள். அவர்களுக்கும் அதே புத்தி நிறைய உண்டு. இதற்குச் சாதிப் புத்தி போய்விட்டது என்று செபிப்பது மருந்தாகாது. செபிக்கச் செபிக்க இன்னும் சாதி வியாதி கூடும். அந்த வியாதியைப் போக்கும் மருந்துதான் வருணாச்சிரம தர்மம். அது மற்றொருவரை நிந்திப்பது, நசுக்குவது அன்று.

ஒரு பெரியவர் சொன்னார் சைவன் ஆவான் தீண்டாதான் என்று தன் வாழ்க்கையில் மற்றொருவரைத் தீண்டாமல் வாழ்பவனே சுதந்திரன்; சைவன். ஒரு மிடறு தண்ணீருக்குக்கூட இரந்து வாய் பிளக்கிறவன் எப்படிச் சைவனாதல் முடியும். எவன் ஒருவன் மற்றொருவரைத் தீண்டாமல் வாழ்வானோ. அவன் மற்றொருவரால் தீண்டப்பட்டான் என்பது மற்றொரு விதி

வைதிகத்தில் உயர்ந்த வருணத்தான் தாழ்ந்த வருணத்தானிடம் பாடங் கேட்கலாகாது. கேட்டாற் பாடஞ் சொல்லுகிறவனின் சாதி வியாதி கேட்கிறவனுக்கு நோய் செய்யும். வைதிகத்தில் நடக்கும் பாடம் உலக பாடம்; சைவத்தில் நடக்கும் பாடம் சத்திநிபாத பாடம்; அஃதாவது ஞான பாடம். ஜனகரிடம் பிராமணர்கள் பிரம விசார பாடம் கேட்டார்கள்.

ஞான பாடஞ் சொல்லுவோன் சாதிப் புத்தி இல்லாதவன்; அவன் புத்தி திருவருட் புத்தி; புத்தியை ஒப்பித்தவன். உலக பாடஞ் சொல்லுவோன புத்தியைத் தன் வயத்தில் வைத்திருப்பவன். அவனுக்குச் சாதி குலம் பிறப்புப் புத்தி போகாது. அவனிடம் பாடங் கேட்டால் அவன் தீக்குணம் கேட்போரைப் பற்றிக் கொள்ளும்

பாரத தேசம் ஆயிரக்கணக்கான வருஷங்களாக மிலேச்சர்களுக்கு அடிமைப்பட்டு; அவர்களிடம் உலக பாடம் படித்து வந்தது, வருகின்றது. அதனாலே அது தனது பாரத கலாசாரத்தை இழந்துவிட்டது.

வளரும்.

## சுன்னாகம் ஸ்ரீ சந்திர சேகர விநாயகர் கோயில்

ஸ்ரீ சந்திரசேகர விநாயகருக்கு மங்களகரமான பிங்கள வருடம் சித்திரைத் திங்கள் 12 ஆம் நாள (24-4-77) ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணிக்குப் புதிதாக அமைக்கப்பெற்ற கொடிஸ்தம்பத்தில் கொடியேற்றம் நடைபெற்றது 20 ஆம் நாள் (2-5.77) திங்கட்கிழமை இரதோற்சவமும் 21ஆம் நாள் (3-5-77) செவ்வாய்க்கிழமை தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

பிரதிஷ்டா சிரோமணி, கிரியா கிரமஜோதி சாமி விஸ்வநாதக் குருக்கள் சிறப்பாகக் கொடி ஏற்றி வைத்தார்

ஒவ்வொருநாளும் மாலை நல்லை ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் சங்கீத கதாபிரசங்கம் நடைபெறுகின்றது,

சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்க தண்புனல்
வேந்தனு மோங்கு
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையக முந் துயர் தீர்கவே
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

பிங்கள ஹூ சித்திரை மீ" கள - உ வெள்ளி

## தமிழ் பேணுந் திருநாள்

மாணுக்கர் மொழி உணர்ச்சி உள்ளவர்களாக வளர்வதற்கு ஆசிரியர்களும் பெற்ரோரும் வழிகாட்டிகளாக அமைவதே தமிழகச் சால்பு. இத்தகைய உத்தம நெறியை நெறிப்படுத்துவதற்குக் கோயில்களும் கல்லூரிகளும் உரிய நிலையங்களாகும். இல்லங்களிலே தந்தை தாயர் சொல்லிக் கொடுப்பதைக் கல்விக் கழகங்களும், ஆலயங்களும் தொடர்ந்து பயன்பெறச் செய்வதே சீரிய முறை. அரிய இப்பணியிலே கலைக்கழகங்களில் ஆசிரியர்களும் மாணுக்கர்களும் வகுப்பு வேளையில் மட்டுமன்று மன்றக் கலந்துரையாடல்களிலும் கவனத்தைச் செலுத்துவது மேலும் சிறப்புடையதாய் விளங்கும் என்பதற்கு எடுத்துக்காட்டாக மகாசனக் கல்லூரித் தமிழ் மன்றம் தமிழ் பேணுந் திருநாளை ஒழுங்காக நிகழ்ச்சிப்படுத்துகின்றதை யாம் மிக மிக வரவேற்கின்ரோம்

தாய் மொழி வளர்த்த வளர்க்கின்ற பண்டிக பரம்பரை இந்நாட்டில் உண்டு. ஈழத்திலிருந்து தாயகஞ் சென்ற கல்விமான்கள் ஆங்கு இத்தொண்டினை நன்காற்றி வந்திருக்கின்றனர். பெரியோர் செய்த பெரும் பணியைப் பாராட்டுவதிலே அதன் பயன் விரிந்து வளமாகும் என்பதை மகாசனக் கல்லூரித் தமிழ மன்றம் நன் குணர்ந்திருப்பதோடமையாது இதுவரையிற் பல பேரறிஞர்களின் நினைவை அவ்ஞேரின் வரலாற்றையும் உருவப் படத்தையும் வெளிப்படுத்தித் தம் மனத்தும் அந் நிகழ்ச்சிகளிற் பங்குபற்றுபவர்கள் உள்ளத்திலும் பதிய வைத்து வருகின்றனர்

பங்குனித் திங்களிலே வித்துவ சிரோமணி சிவசிறீ சி. கணேசையர் அவர்களின் மொழிப்பணியை ஓர் வெளியீடாக அபிமானிகளுக்கு வழங்கிக் கல்லூரி மண்டபத்தில் அப் பெரியாரின உருவப் படத்தையும் திரை நீக்கம் செய்து தமிழ் மன்றம் தமது முயற்சியின் முதன்மையை எடுத்துக் காட்டியிருக்கின்றனர்,

அறிஞர்களைப்பற்றி மாணுக்கர் முதற்கண் அறிந்தாலன்ரே மாநிலமும் அப் பயனை அடைய முடியும். முன்ஞேர் வகுத்த நூல்களைத் துருவி ஆராய்ந்து தொடர்ந்து சார்பு நூல்களை உதவுகின்ற கலவிச் செல்வர்களே அறிஞர்கள ஆவர். அறிஞர்களை அறிய வைக்கும் மகாசனத் தமிழ் மன்றம் போன்று யாழ் வளாகமும் இவ் வழியிலே பெருந் தொண்டாற்றி வருகின்றது, எனவே எங்கள் பழங் கலை வளம் என்றும பயன் பெறக்கூடிய வாய்ப்பு நன்கமைந்திருப்பதென்று நாம் அக மகிழ்கின்ரேம

## சைவ மரபு பேணப்படுகிறதா?

சித். சிவரத்தினம் யாழ்ப்பாணம்

(முன் வளர்ச்சி — 4)

சைவசமயத்தவர் வேறு எந்தச் சமயத்தவருக்கும் விரோதிகளல்லர். ஒவ்வொரு சமயத்தவரும் அந்த அந்தச் சமய நெறி முறைகளின் படி நடந்து பயனடைய வேண்டுமென்ற பரந்த மனப்பான்மை கொண்டவர்கள். ஆனுல் சைவசமய நெறி முறைகளை ஊறுபடியாக்கும் கொள்கையை ஏற்றுக் கொள்ளமாட்டார்கள்.

சமயநெறிமுறைகளை முரண்பாடான முறையில் சிறுவர்களுக்குக் கற்பிப்பதனுல் சமய நம்பிக்கை யற்று நிரீச்சுர வாதமே தலைப்படும் என்பது நாம் அனுபவரீதியாகக் கண்ட உண்மையாகும். இக்கால மாணவரிற் பலரின் சமய நம்பிக்கையீனத்திற்குக் காரணம் இதுவேயாகும்;

சைவப்பெரியாராகிய நாவலர் பெருமான் காட்டிய நெறிகளையே சைவ சமயத்தவர்கள் பின்பற்றுகின்றனர். அவர் ஆக்கிய நூல்கள் சைவ நெறி முறைக்கு வழிகாட்டியாக விளங்குகின்றன,

சைவ மரபிற்ரேன்றிய சைவப் பெரியார் திரு- சு- சிவபாதசுந்தரம்பிள்ளை, பண்டிதர் ம- வே திருஞான சம்பந்தப்பிள்ளை, சிவஸ்ரீ ச- குமாரசாமிக் குருக்கள் ஆகியோர் ஆக்கிய சைவசமய நூல்கள் சிறுவர்களுக்கு இன்றும் ஏற்றவையாக இருக்கின்றன.

பண்டிதமணி சி. கணபதிப் பிள்ளை அவர்கள் 6ம் வகுப்பு சைவ நெறிப் புத்தகம் பற்றி இந்துசாதனப் பத்திரிகையில் கூறிய கருத்துக்கள் கவனிக்கத் தக்கதாகும்;

1965ம் ஆண்டில் முன்னைய அரசாங்கம் 2ம் வகுப்பு சைவ நெறிஎன்னும் நூலை வெளியிட்டு அடுத்து 3-ம் வகுப்பு நூலை வெளியிடாது விட்டதற்குக் காரணம் சமயத்தில் அரசியல் தலையீடு இருத்தலாகாது என்ற கொள்கையினுலே என்பது தெற்றென விளங்கும்.

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை சைவ சமய முரண்பாடுகள்பற்றிய பல மூறை யீடுகள் செய்தும் வந்துள்ள தெனினும் [illegible] காதும்.

---

நேயர்கள் நெஞ்சம்

## கருப்பநீரா கள்ளா? எது மக்கள் விருப்பம்?

— "மயிலிட்டி-நாதன்" — "நாயன்மார்-நாதன்" —

"மானிடப் பிறவியே பெறுதற்கரிய பிறவியாக யாவரும் போற்றுகின்றனர், அத்தகைய அரிய பிறவியைப் பெற்றும்; அதன் மூலம் செற்கரிய செய்து சிறப்படையாமலும், நல்லவற்றையே சிந்தித்து, செயலிற் காட்டி நல்வினையைத் தேடிக்கொள்ளாமலும் வாழ்நாட்களை வீணுட்களாக்கி மாண்டு மடிந்து போகின்றனர் அநேகமானோர். இவர்களை என்னவென்று சொல்வது? இவர்களை மக்களாக வாழச் செய்ய வழி வகையென்ன?

நாம் உலகின்கண் வாழும் நாட்கள் இவ்வளவு என்று எம் மாற் கூறிவிட முடியாது! இன்ரே, நாளையோ அல்லது இக் கணமோகூட நம் ஆயுள் முடிவடையலாம். அதை நாம் அறிய வல்லாரில்லை, ஆதலின் நாம் நாளை நாளை என்று நல்லவற்றைச்செய்வதற்குக் காலம், நேரம் பார்த்துக்கொண்டு காலந் தாழ்த்துதல் மதியீனமாகும்; 'ஒன்றே செய், நன்றே செய்; அதுவும் இன்றே செய்; அதையும் இக் கணமே செய்' என்னும் முதுமொழிக்கொப்ப விரைந்து செயற்படவேண்டும்.

நமது அரசு பனம் பதநீரை முழுமையாக ஆக்குவித்துப் பதனீர்க் குதங்கள் மூலம் நாட்டின் மூலைக்கு மூலை விற்பனை செய்து பெரும வருவாயைத் தேடிக் கொள்ள முற்படாதது ஏனே? கள்ளுக் கடை ஒழியட்டும்! பஞ்சமா பாதகங்களுக்குக் காரணமான மது அரக்கனின் கொடுமையைத் தொலைத்திட ஒரு மகாத்மா வரமாட்டாரா?

குடிப்பழக்கத்தினுல் ஏற்படும் குற்றச் செயல்கள் கொஞ்சமா! கள்ளைக் கருப்பனீராக்கி விற்பனை செய்ய நமது அரசு முன் வரக் கூடாதா? இம் முயற்சி வருவாயைப் பெருக்காது என அஞ்சுகின்ருர்களா? மக்களின் நலம் பேணுவது அரசின் கடனன்ரே? இதுவிடயத்தில் நம் அரசு கவனம் எடுக்கும் நாள் எந்நாளோ?

பனம் பதநீரைக்கொண்டு, பனம் வெல்லம் — பனஞ் சீனி பனங் கற்கண்டு — கல்லாக்காரம் என்பன ஆக்க முடியும், இவற்றைச் சுத்தமாக சிறந்த பனை ஆராய்ச்சிப் பண்டிதர்களின் ஆலோசனைப்படி தயாரித்து விற்பனைக்கு விட அரசு முன் வருமா? நோயாளருக்கு அரிய மருந்தெனப் பேசப்படும் இப் பனம் பண்டங்களைப் பெருமளவிலே முழுமையாகச்செய்ய வேண்டுவது அவசியமாகும். இதன் மூலம் அரசு தன் திறை சேரிக்கும பெருமளவு பணத்தைச் சேகரித்துக்கொள்ளலாம் என்பது பல அறிஞர்களின் கூற்ருகும்.

மக்கள் வாழ்வை நலிவடையச் செய்யும் மது அரக்கனை அறவே ஒழியச் செய்ய வேண்டும், நாடும் வீடும் நலம்பெற மது நீக்கத் திட்டம் சட்டமாக்கப்படுவது மிக மிக அவசியமாகும்- இதுபற்றி அரசு கவனிக்குமா? அறிஞர்கள் எடுத்துரைப்பார்களா? மதத் தலைவர்கள் புத்தி சொல்ல வேண்டாமா?

---

## நூலரங்கம்

### ஸ்ரீ முன்னேஸ்வரம் ஸ்ரீ வடிவாம்பிகா தேவி அந்தாதி

ஆக்கம்: "சொக்கன்"

வெளியீடு:

ஸ்ரீ நிரஞ்சனு அச்சகம் நல்லூர்.

வடிவாம்பிகா தேவிக்கு வாழ்த்தென்ருல் அது இயற்கையாய் வடிவாகவே அமையும். அதுவும் ஸ்ரீ முன்னேஸ்வர அன்னைக்கென்ருல் எவ்வாறிருக்கும்?

இந்த வடிவை யமைத்திருக்கின்ருர் 'சொக்கன்'

"காரிகை நாம
மெக்காலத்தும்
ஓதுமின் காதலுடன்"

என்ற பேரிகை கொட்டுகின்ருர் இந்த அன்பர்

அன்னையின் கரம் அசைந்தால் பின் நடப்பதென்ன? சொக்கனே சொல்கின்ருர்வரும்பயனை.

"கண்மணியாளின்
காண்டற்கரிய
கவினை யெலாம்
காண வம்மின்"

என்ற கவிக்குரல் கூவுகின்றது, யாரறிவார் யாமளையின் பெற்றி என ஆராயுமிக் கவிஞர் இவள் என்றும் இருப்பவள் என்று இலக்கணம் வரைகின்ற நயம் காண்க.

"பூம்பொழிலிற் கொய்திடு பூ.
அன்னைக்கு
போடும் பத்தர்காள்
நுங்கள் நெஞ்சகப்
பூவையும் கொடுத்திடும்"

என்று வழிபாடு ஆற்றுப்படுத்தும் வண்மை நுண்ணிது.

'இதயத்தில் ஒன்றே
பரம்பொருள் சத்தி'

என்ற கருத்து எடுத்த கவிஞர் முன்னைநாத சுவாமிக்கும் பதிகம்பாடி அக் கருத்தை விரித்துவக்கின்ருர்,

"மாதான வடிவழகி
யோடினி தமர்ந்தருள்
மாதேவ! முன்னை அரசே!

எனக் காதலாற் கவி சொலும் ஆசிரியர் ஞான மீந்து நல்லாறு காட்டுமோர் தொல்லாறமைத்தவர் என்ற சித்தாந்தப் பழம் பொருள் விளங்க வைக்கின்றனர்.

பாடுக என்று பணிகூட வைத்த சிவசிறீ நாகேஸ்வரன் எண்ணம் பாராட்டுக்குரியது.

முன்னைநாத சமேத அன்னையை என்றும் உன்னும் அன்பன் பேராசிரியர் கலாநிதி கைலாசநாதக் குருக்கள் முன்னுரைப் பொருத்தமும்காணலாம்! பொய்மையாளரைப் பாடும் பொய்யுலகில் மெய்மையாளரைப் பாடும் பணி மெச்சப்படவேண்டியது,

என்னை? எழிலழ கேதிவ்
வியல்பென்!
றெடுத்தமைக்க
அன்னை அருளாற்றல்
அப்பன் அநுமதி
ஆய்ந்து திரு
முன்னை வடிவு முகிழாம்
பிகையிறை
மூன்னெகிழ்ந்து
சொன்ன சுவைத்தமிழ்
சொக்கன் இதயத்
துடிப் பொலியே.

---

## கந்தபுராண படனம்

வண் - சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவிலில் மூன்று மாத காலமாக நடைபெற்றுவந்த கந்தபுராண படனத்தின் சார்பாக 24-4-77 ஞாயிற்றுக் கிழமை காலை 7மணி முதல் இரவு 9 மணி வரை தொடர்ச்சியாக சூரபன்மன் வதைப்படலப் புராணபடனம் நடைபெற்றது- விசேட அபிடேக ஆராதனை பகல் மாகேசுர பூசை என்பன நடைபெற்றது, புராணபடனத்தில் சைவ பிரசாரகர் சி, தம்பிஐயா, கவிஞர் செ- கதிரேசர் பிள்ளை, சைவப்புலவர் சு. வி. மகாலிங்கம், ஆசிரியர் க, தர்மலிங்கம், சைவப்புலவர் வ.கந்தசாமி, பண்டிதர் தி, பொன்னம்பலவாணர், அர்ச்சகர் திரு: அ, சிவசுப்பிரமணியம். வைத்திய கலாநிதி நா. கனகரத்தினம், சைவப் புலவர் திருஞான சம்பந்தப் பிள்ளை, இளைப்பாறிய அதிபர் திரு. க. முருகேசு சைவப் புலவர் வே. கந்தசாமி ஆகியோர்பங்குபற்றினர், இரவு 9 மணியளவில் முருகப் பெருமானுக்கு நடைசெற்ற சகஸ்ரநாம அர்ச்சனையுடன் சூரபன்மன் வதைப் படலம் நிறைவாயது வைகாசி விசாகத்துடன் புராண படனம் நிறைவாகும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமுறைத் திரை நீக்கம் செய்துவித்த பொல்லாப் பிள்ளையார்

எமது சிதம்பரம் சிறப்பு நிருபர் திரு. மா. பாலசுப்பிரமணியன்

தில்லையம்பதிக்கு மேற்கே, 10கல் தொலைவிலுள்ள, திருநாரையூர் என்று கூறும் சிவஸ்தலத்தல். சுமார் 800 ஆண்டுகளுக்கு முன்னர் ஆதிசைவ மறையவர் குலத்தில் நம்பியாண்டார் நம்பி அவர்கள் உதித்தவராவார் அத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ பொல்லாப்பிள்ளையாரைப் பூஜித்து வரும் குடியைச் சார்ந்தவராவார்.

நம்பியாண்டார் நம்பி அவர்கள் முறைப்படி உபநயனம் செய்து கொண்டு வேதங்களை — ஆகமங்கள் தமிழ் இலக்கண இலக்கியங்கள் முதலான நூல்களைப்பயின் றுவரும்போது ஒருநாள் நம்பியாண்டார் நம்பி அவர்களின் தந்தையார் அவர்கள் வேற்றூருக்கு சென்றனர், தந்தை அவர்களின் கட்டளையை சிரமேற்றாங்கி, நம்பியாண்டார்நம்பி அவர்கள், ஸ்ரீ பொல்லாப் பிள்ளையாருக்கு பூஜைசெய்யச் சென்று முறைப்படி அபிஷேக அலங்காரங்களைச் செய்துவிட்டு, தான் கொண்டுவந்துள்ள நிவேதனத்தைச் ஸ்ரீ பொல்லாப் பிள்ளையாரின் திருமுன் வைத்து எம்பெருமானே "திருவமுது செய்தருளல வேண்டும்" என இறைஞ்சிடவும் ஸ்ரீ பொல்லாப்பிள்ளையார் திருவமுது செய்யாதிருக்கக் கண்டு பெரிதும் வருந்தி ஏதேனும் தவறிங்குண்டோ? வேழமுகனே! அடியேனுடைய நிவேதித்திட்ட திருவமுதினை உண்ணாததென்ன" என்று வருத்தமடைந்து தன்னுடைய தலையைச் சுவரில் மோதிக்கொள்ள முற்பட்டபோது வேழமுகத்தோனே நம்பி! பொறு என்று கூறி நிவேதனத்தைத் திருவமுது செய்துள்ளார், வேழமுகத்தோன் திருவமுது செய்துள்ளதைக் கண்டு நம்பியாண்டார்நம்பி அவர்கள் பெருமகிழ்ச்சி அடைந்து "எந்தையே" இனிமேல அடியேன் பாடசாலைக்குச் சென்றால் எங்கள் ஆசிரியர் அவர்கள் அடிப்பார்கள் ஆதலால் தாங்கள்தான் அடியேனுக்குக் கல்வியை போதித்தருளல் வேண்டும் என்று விண்ணப்பிக்க, ஸ்ரீ பொல்லாப்பிள்ளையார். நம்பியாண்டார் நம்பிக்கு சகல கலைகளையும் கற்பிக்கலானார்.

அற்புதச்செய்தி எங்கும் பரவிவிட்டது. இந்நிலையில் அப்போது தஞ்சையிலிருந்து அரசாட்சி புரிந்துகொண்டிருந்த இராஜராஜசோழ மன்னன் மிகக சிவபக்தன் மன்னனைக் காணவரும் சிவபக்தர்கள் தேவாரத்தில் சிவபாடல்களைச் சொல்லுவார்கள். மன்னன் அவற்றின் இனிமையிலே உள்ளத்தைப் பறிகொடுத்து தேவாரம் முழுவதும் எங்கே கிடைக்கும் என்று ஆராயலானன், தேவாரங்கள் எங்கும் கிடைக்காமற் போகவே, மனம் வருந்தினன் மன்னன் அதுசமயம் திருநாரையூர் நம்பியாண்டார்நம்பியின் அற்புதச்செய்தி மன்னனின் காதில்விழவே! மன்னன் உடனே திருநாரையூர் நம்பியாண்டார் நம்பி அவர்களைக்கண்டு தன்னுடைய குறையைப் போக்கிக்கொள்ள முடிவுசெய்து கொண்டு, பிள்ளையாருக்கு வேண்டிய மதுரமிக்க வாழைக்கனிகள், தேன் அவல், அப்பம், எள்ளுண்டை இவைகளைகணக்கில் அடங்காத முறையில் நிவேதனப் பொருள்களையும் பெரும் மகிழ்ச்சியோடு மன்னன் வாகனங்களில் சுமந்துகொண்டு தன்னுடைய சேனைகளுடன் திருநாரையூருக்கு வருகைபுரிந்தார் (மன்னன் கொண்டுவந்துள்ள நிவேதனப்பொருட்கள் திருநாரையூரில் இடம் போதாது பதின்காத அகல எல்லைவரை இருந்தன) மன்னன் நம்பியாண்டார்நம்பிகளைச் சந்தித்துப் போற்றிமன்னன் கொண்டு வந்துள்ள நிவேதனப் பொருட்களை, ஸ்ரீ பொல்லாப்பிள்ளையாருக்கு இப்பொழுதே நிவேதிக்க வேண்டுமென்று விண்ணப்பிக்க, நம்பியாண்டார்நம்பி அவர்கள் மன்னன் சொன்ன வார்த்தையைக் கேட்டு "நன்று உமதுபணி என்று தெரிவித்துக் கொண்டு, நம்பியாண்டார் நம்பி வேழமுகத்தோனின் அடிபணிந்து மன்னன் இங்கு கொண்டுவந்துள்ள நிவேதனப் பொருட்களை 'திருவமுது" செய்தருளும்படி வேண்ட வேழமுகத்தோன் பதின்காத அகல எல்லைவரை இருந்துள்ள நிவேதனப் பொருட்கள் புகுந்த இடம் அறியாத வண்ணம செய்துவிட்டதை மன்னன் கண்டு அகம் நெகிழக் கண்ணீர் கசிந்துருக நம்பியாண்டார்நம்பி அவர்களை மிக்க மகிழ்ச்சியுடன் வணங்கிக்கொண்டு மிகவும் முக்கிய விண்ணப்பம உண்டு" நம்பி அவர்களே! கேட்க வேண்டுமென்று மூவர் செந்தமிழ் (தேவாரங்கள்) பூதலத்து வளங்க வேண்டுமென்று விண்ணப்பித்தான், மன்ன! பொறு என்று கூறிவிட்டு, நம்பியாண்டார்நம்பி ஸ்ரீ பொல்லாப் பிள்ளையாரின திருமுன தாழ்ந்து மன்னனின் விண்ணப்பத்தை தெரிவித்துள்ளார். ஸ்ரீ பொல்லாப்பிள்ளையார் "தில்லையில் பொன் மன்றத்தின் அருகே மூவர் திருக்கர முத்திரைகளோடு தேவார ஏடுகள் உள்ளன என்பதனையையும், அன்றியும் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனுர் பாடிய பதிகங்கள் பதினாறாயிரம்; திருநாவுக்கரசுநாயனர் பாடியவை நாற்பத்தொன் பதினாயிரம் பதிகங்கள் சுந்தரமூர்த்தி நாயனர் பாடியவை முப்பத்தெண்ணாயிரம் பதிகங்கள் என் பதனையும் நம்பியாண்டார் நம்பியினிடத்தில் உணர்த்தினர்; இச்செய்தியை நம்பியாண்டார்நம்பி மன்னனிடம் அளித்தார்,

—

## சைவாலயம் நிறுவ முயற்சி

———

மிருசுவில் படித்த பெண்கள் குடியேற்றத் திட்டத்தை 'அல்லி அரசாணி' த் திட்டமென்று புகழ்வது சகசம்,

அங்கு ஓர் சைவ ஆலயம் இல்லையென்ற குறையை தென்மராட்சி பக்தி நெறிக் கழகம் மாவட்டக் காணி அதிகாரிமூலம் வடமாகாண அரசாங்க அதிகாரிக்கு விளக்கியுள்ளது, சேவு ஆசிரியை ஒருவரின் பிரிவுபசார விழாவில் பேசிய சைவப்புலவர் கு. வி. மகாலிங்கம் கூறினர்.

## பாலர் ஞானோதய சபை— இசைக்கல்லூரி

———

தெல்லிப்பழை காசிவிநாயகர் தேவஸ்தானத்தில் சித்திரை மீ 0 வெள்ளிக்கிழமை திரு. ஆ. சரவணமுத்து. J. P. அவர்கள் தலைமையில சிவநெறிப் புரவலர் சைவதர்மவள்ளல் உயர்திரு. க. கனகராசா J. P, அவர்களால இசைக்கல்லூரி மண்டபம திறந்து வைக்கப்பட்டது. பேராசிரியர் சிவஸ்ரீ கா. கைலாசநாதக்குருக்களும செந்தமிழ்ச் செல்வி, பண்டிதர் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியும் ஆசியுரைவழங்கினர். இசைக்கலவீரி மாணாக்கர் பண்ணிசைத்தனர். இசைமணி பொன். முத்துக்குமாரு நன்றியுரைத்தார்.

## விதைகள் இலவசம்

———

இளைஞர் விவசாயக் சழகங்கள், பொது மன்றங்கள், சங்கங்கள் ஆகியவற்றிற்கு சணல்விதைகளையும், பருத்தி விதைகளையும் இலவசமாக கொடுத்து ஊக்குவிக்க யாழ்ப்பாணம் பில்கவைற தாபனத்தார் முன்வந்துள்ளார்கள். பெற்றுக்கொள்ள விரும்பும் மேற்படி கழகங்கள் அத்தாட்சிக் கடிதம்கொடுத்து இலவசமாகப பெற்றுக் கொள்ளலாம்.

## வானொலியில் சிவ நெறி

———

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத தாபனத்தால் ஞாயிற்றுக் கிழமைகளில் காலை 9.00 — 9-30 வரை நடாத்தப்பெறும் 'சிவநெறி' - சஞ்சிகை நிகழ்ச்சி 10-4-77 தொடக்கம் ஈழத்துத் திருநெறித் தமிழ் மன்றத்தினலே தொகுத்தளிக்கப் பெற்று வருகிறது. நிகழ்ச்சியின இறுதியில் நான்கு சிவநெறிக் கேள்விகள் கேட்கப்பட்டு சரியான விடைகளை அனுப்பும் நேயர்களில் அதிட்டசாலியான ஒருவருக்கு ஒவ்வொரு வாரமும இருபத்தைந்து ரூபா பரிசும் இம்மன்றத்தினல்வழங்கப்பெற்று வருகிறதென மன்ற செயலாளர் திரு சோ. சண்முக சுந்தரன் தெரிவிக்கின்றார்.

## குரு வாக்குத் திரு வாக்கு

———

'குரு வாக்குத் திரு வாக்கு, இவ்வரிய வாக்கை மனதில் ஏற்று சாவகச்சேரி சப்பச்சி மாவடிப் பிள்ளையார் கோவில் ஆலய நிர்வாக சபை இவ் ஆலயத்திற் பாலஸ்தாபனம் செய்துள்ளார்கள். பல வருடம் குருக்கள் பிரம்மஸ்ரீ பொ. சோமசுந்தரம் கூறிய புத்திமதியைக் கொண்டு புனராவர்த்தனை ஒழுங்குகள் இடம் பெறவுள்ளன. (ஏ)

## பயிருக்கு மருந்து உயிருக்கு உலை

———

இப்பொழுது இந்நாட்டிலே பாவிப்புக்கு வியாபார நிலையங்களில் விநியோகிக்கப்படும் கிருமி நாசினியைப்பற்றி எச்சரிக்கையாயிருக்க வேண்டும்.

இந்த மருந்தைக் கையாளும் முறையை நன்கு பழகிய பின்னரே அதை உபயோகிக்க வேண்டும்.

பல இடங்களிலே இம் மருந்தைப் பயன் படுத்தியவர்கள் மயக்க நிலையடைந்தார்கள் என்றும் சிலர் உயிர் நீக்கவேண்டி வந்ததென்றும் செய்திகள் வெளி வருகின்றன.

கிருமியைக் கொல்லப் போய்ப் பெருங் கிருமியாகிய மனித உடம்புக்குப் பாதகம் விளைவிப்பது வீண் செயல், கமக்காரர் கவனமெடுக்க வேண்டும் இந்த விஷயத்தில் ஒவ்ரு மருந்து வியாபாரிகளே எச்சரிக்கை யிடுகின்றனர்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ. இல. ஈடு /718

மல்லாகம் மாவட்டக் கோடு

I. மயில்வாகனம் செல்வராசனும்
2; பெண் சண்முகவடிவும் — குப்பிளான்

எதிராக — வாதிகள்

வேலுப்பிள்ளை அப்புத்துரை கைம்பெண் அமராவதி 56 சிவன்பண்ணைவீதி வண்ணார்பண்ணை மேற்கு யாழ்ப்பாணம் குறித்த வேலுப்பிள்ளை அப்புத்துரையின் மரணச் சாதனத் தத்துவகாரராக.

— பிரதிவாதி.

மல்லாகம் மாவட்டக் கோட்டின் ஈடு 718-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கட்டளைப்படி, கீழே விபரிக்படும் ஆதனம் 1977-ம் ஹூ வைகாசி மாதம் 5-ந் திகதி (5-5-77 வியாளக்கிழமை காலை 9-30 மணி தொடக்கம் அவ்வாதனத்திற்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னல் விற்கப்படும்,

### தீர்வைத்தொகை

முதலும் வட்டியுமாக 3,510/— மேலும் 2,000/— ரூபாவிற்கு 5-6-75 தொடக்கம 26-3-76 வரைக்கும் நூற்றிற்கு 9 வீத வட்டியும் கூட்டிக கூடிய தொகைக்கு 26 3-76 தொடக்கம் முழுபபணம இறுக்கும்வரைக்கும 5 வீத வட்டியம் கோட்டுச் செலவு 392-80 சதமும. நடைபெற்ற செலவு 238 90, நடைபெறவேண்டிய செலவு 72/65 மேலதிக செலவு 81-25)

### ஆதன இடாப்பு

வட மாகாணம் யாழ்ப்பாண மாவட்டம்; வலிகாமம் வடக்குப் பகுதி மல்லாகக் கோவிற்பற்று ஏழாலை இறை தோலங்கடவையும் மேற்கு சீமாவும் நிலப் பரப் பரப்பு 9¼ செய் பயிர் வான் பயிர்களும பனைகளும எல்லை கிழக்கு ஒழுங்கை வடக்கு வேலுப்பிள்ளை அப்புத்துரையின் உரிமைக்காரருக்கும குறித்த அப்புத்துரையின் சகோதரருககுமுரிய வாதனம். மேற்கு கந்தவனம் பெண் மங்கையற்கரசியின் ஆதனம். தெற்கு நவரத்தினம் பெண் மகேஸ்வரியின ஆதனமும ஒழுங்கையும், இதடங்கலிற் சொரியலாய் ¼ பங்கும் அதற்குரியவைகளும். தெற்கெல்லைக் காணிக்குள் இருக்கும் கிணற்றில இதற்குரிய தண்ணீர்ப் பங்கும் வழிவாய்க்காலுரித்தும்.

அகில் அகம்  தா. க. பொன்னுத்துரை J.P.
28/1 யாழ் ரோட்  கொமிஷனரும விலைமதிப்பாளரும
யாழ்ப்பாணம், 13-3,77  10, 29-4-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### THOUGHTS TO BE TREASURED

ஓடவல்லார் தமரோடு நடாவுவன்,
பாடவல்லா ரொலி பார்மிசை வாழ்குவன்,
தேடவல்லார்க் கருள் தேவர் பிரானொடும்
கூடவல்லாரடி கூடுவன் யானே.

I shall accompany pilgrims visiting holy places I shall live where there is the melody of worshippers singing the Lord's praises. Him the Lord that blesses those who seek and contemplate on Him, do Siva Gnanies realize And their company shall I seek

Hindu Organ

Friday, April 29, 1977

## Trust Must Remain Trustworthy

The Navalar Saiva Prakasa Vidyasalai at Vannarponnai is a historic institution that is dear to the Saiva Public. The illustrious founder of this educational establishment had performed a religious duty when he inaugurated the school almost one hundred years ago — for the avowed object of enabling Saiva children receiving their instruction in conformity with the age-long tradition of the tenets of Veda Sivagamam.

The name Saiva Prakasa Vidyasalai is not a mere appellation; it connotes its true content. Hence the paramount duty of all who are at present connected with the functions of this specially significant school is to operate as true guardians of the Religious Charitable Institution that it is. It is indeed a rigorous responsibility for Trustees to work the Trust as the intentions of the Great Founder have been based on strictly orthodox practice of the Saiva Faith.

With the taking over of this Vidyasalai by the State seventeen years ago, the administration of the institution has been subjected to frequent changes resulting in the original purposes and objects of the revered Founder being overlooked. But in the meantime several organizations have been sponsored to draw the attention of the Authorities to the need for strict adherence to the guiding principles of the Navalar Trust. However, it becomes the sacred duty of all Saivaites to make the Administrators of the Navalar Trust immediately set about to bring the working of all establishments belonging to the Trust in accordance with the praiseworthy objects of the benefactor.

The Navalar School has to honour the hopes of its illustrious architect. To mention a few, the instruction at this hall of learning must be in strict conformity with the commandments of Veda Sivagamas. Teachers must be orthodox Saivaites, the tuition should include the teaching of Saiva Shastras, Thirumurais and the practice should envisage the conducting of Purana Padanas and the observance of Guru Poojahs along with the meticulous attention to all principles relating to the maintenance of the Temple within the premises.

A correspondent of ours brings to our notice that a lavatory has been constructed just in front of the Temple facing the Navalar Veethi and adjacent to the main hall. We do not think that sanitary arrangements could be made so as to disfigure the renowned institution and desecrate the holy premises, particularly as this is a **Specially Significant School**. As a first step in bringing the working of the school within the purposes of the Trust the toilet room must be re[illegible] proper place. Let us watch the response [illegible] reasonable requests.

## A Grand Vasantha Navaratri and Candehomam at an Ancient Sivasthala — Munnisvaram

BY V. SIVASAMY

Festivals in honour of Devi, the Mother Goddess have a popular appeal. Among the festivals in honour of the Devi, there are four Navaratries, of which the Sarada Navaratri (which falls in Puraddaci) is the most popular one among the Hindus. The Vasantha Navaratri is equally important. This falls in the month of Pankuni. It is very seldom celebrated in India. But in Sri Lanka, it is celebrated only at the ancient Siva Temple Munnisvaram, for the last three years.

Like the Sarada Navaratri this falls during the bright half of the month, beginning on the first day after the new moon and continues for 10 days culminating on the Dasami day. It is to be noted that the first day of the Navaratri coincides with the birth of the Candrayana New Year.

The celebrations have a special and unique flavour. As pujas preceded by homas are said to be very efficacious and auspicious, here the homa is performed first in the morning. As this homa is performed to propitiate Candi the Supreme Mother Goddess representing Durga, Laksmi, and Sarasvati, the entire festival is also known as **Candi-homa**.

The daily festival begins by four a. m. with the recitation of the Vedas and the performance of homa in which the Devimahatmayam, Lalitatrisate and Lalita Sahasra Nama are recited and even experts in the yoga rituals sit at the homakundas. The largest of the homakundas (the Mahakunda) is looked after by Dr. K. Kailasanathakkurukkal Professor of Hindu Civilization and a leading if not the most prominent expert in the Hindu rituals in Sri Lanka. The Purna Ahuti which takes place by about 8 a. m. is the climax of the homa. Here, after a series of rituals performed with great devotion, it is believed that the Ambiha manifests Herself in the yagagni and accordingly various upasaras like the abhisekam, the presentation of garments, jewels, garlands etc. are performed in the Purnahuti. This is usually a wonderful sight.

A little later, the magnificent utsavamurti of the presiding Goddess Vadivambikai is brought in front of the Vasanta mandapa for the abhisekam. This abhisekam goes on for about two hours with all meticulous details as set forth in the Agamas. This ceremony reaches climax with the abhisekam performed with the consecrated water from the Purnakumbha kept at the yagasala. It is indeed a rare sight to see the abhisekam performed by an expert like Prof. K Kurukkal in the spacious Mandapa to be seen by all devotees. Thereafter, the abhisekam is performed for the Mulasthana murtis — Munnainathar and Vadivambikai. Later, the utsavamurti is beautifully decorated and taken round the inner courtyard of the temple to the accompaniment of Vadyams, recitation of Sanskrit and Tamil Vedas,

In the evening, some rituals are performed at the yagasala. At the same time, the Meruyantra puja is performed for the beautiful utsavamurti of the Devi seated on the lion throne with all splendour. This pattern of puja is repeated during the nine days. On the ninth day morning, small children participate in the ceremonies as representing the Devi

This year, the festival started on the 18th and terminated on the 29th March. This festival attracts large crowds of people from various parts of Sri Lanka. It is also to be noted that among the devotees, there was a considerable number of Sinhalese and even some Muslims too. Thus it is a centre of inter religious and inter communal harmony and fellowship. Further it must be noted that the elaborate rituals and the performance and conduct of such a procedure of pujas as set forth in the Saivagamas are rare even in India.

## Lofty Leadership

Soft-spoken, solemn, yet stimulating, Mr S. J V. Chelvanayagam, the leader of the Tamil United Liberation Front, was an embodiment of sacrifice that could be described as the innermost urge in leading a campaign for the restoration of the lost rights of a community.

As a lawyer of outstanding ability with a rich practice, it was astonishing that Mr. Chelvanayagam should have taken upon himself along with others the solemn responsibility of guiding a community in its endeavour to re-establish itself in its own country. But the call was for a superior assignment and sacrifice was worth it if the ne[illegible] responsibility were to shape the destinies of a people.

For full thirty three years Mr. Chelvanayagam had been living a life of true sacrifice unmindful of the trials and tribulations which he along with his trusted colleagues and the people had to suffer. Undeterred by protraction, unnerved by persecution and unmoved by diversions, Mr Chelvanayagam plodded on along the path he had chosen and was almost within sight of a shortcut that could lead the campaign to the achievement of the goal. This superior characteristic of the leader earned the esteem of all leaders of liberation movements elsewhere and even won the respect of those against whom he campaigned

It was a lofty leadership nobly led and dutifully performed.

The loss of such a noble leader cannot be endured by a loving people. All that they can gratefully do is to continue the campaign in its noble form.

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலக மெல்லாம்

Printed and published by the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna at their Saiva Prakasa Press, 450 K. K. S. Road Vannarponnai, Jaffna on Friday April 29, 1977.

Editor-in-Chief R. N. Sivapirakasam

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org